சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்: 09.09.2025

D.W.2 - பொன்னுப்பாண்டி த/பெ– ஆறுமுகம்

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. நான் இவ்வழக்கின் 3ம் பிரதிவாதி ஆவேன். இவ்வழக்கில் எனது தரப்பில் தனியாக எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், 1ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொண்டேன். இவ்வழக்கின் வாதி பாண்டியம்மாள் என் உடன் பிறந்த சகோதரி என்றால் சரிதான். 4, 5 பிரதிவாதிகள் என் உடன் பிறந்த சகோதரிகள். நான் பிறந்தது முதல் வழக்கு சொத்துக்கள் உள்ள ஊரில் வசித்து வருகிறேன் என்றால் சரியல்ல, பணி நிமித்தமாக கடந்த 20 ஆண்டுகளாக திருநெல்வேலியில் வசித்து வருகிறேன். 2005ம் ஆண்டு வரை எனது ஊரில் வசித்து வந்தேன் என்றால் சரிதான். தாவா வழக்கில் 4 சொத்துக்கள் உள்ளது. இனாம்காசிரெட்டியபட்டி கிராமம், சர்வே எண்.291ல் 2 ஏக்கர் 66 செண்ட் எங்கள் குடும்ப சொத்து என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.14 ஆவணத்தில் உள்ள சொத்து வழக்கு சொத்து அல்ல.

2. சீர்திருத்த பிராதின் படி சேர்க்கப்பட்ட 5ம் இலக்க சொத்தை பொறுத்து எனக்கு தெரியாது. சர்வே எண்.291 பட்டா எண்.384 ன் படி எனது குடும்ப உறுப்பினர்களின் பெயரில் கூட்டுப்பட்டாவாக வா.சா.ஆ.14ன் படி உள்ளது என்றால் சரிதான். 5ம் இலக்க சொத்து எனது தாயார் பூச்சம்மாளுக்கு வா.சா.ஆ.13 கிரைய பத்திரத்தின் மூலம் பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். தாவா 1ம் இலக்க சொத்து 03.10.1967ம் தேதி கிரையம் பெற்றது என்றால் சரிதான். தாவா 2ம் இலக்க சொத்து 17.06.1978ல் கிரையம் பெற்றது என்றால் சரிதான்.

3. தாவா 3ம் இலக்க சொத்து 03.12.1982ல் கிரையம் பெற்றது என்றால் சரிதான். தாவா 1 முதல் 3 இலக்க சொத்துக்களை வாங்கும் போது வாதி மற்றும் 2 முதல் 5 பிரதிவாதிகள் பிறந்துவிட்டோம் என்றால் 5ம் பிரதிவாதி மாரீஸ்வரி பிறக்கவில்லை. வாதி பாண்டியம்மாள் 10ம் வகுப்பு படித்துள்ளார். வாதி படிக்கும் போதும், திருமணத்திற்கு முன்பும் தோட்ட வேலை மற்றும் வீட்டு வேலைகளை பார்த்து வந்தார் என்றால் வீட்டு வேலைகளை பார்த்து வந்தார், தோட்ட வேலைகளை பார்க்கவில்லை. தாவா சொத்துக்களில் தோட்டம் மற்றும் மானாவாரி நிலம் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் நானும், எனது சகோதர, சகோதரிகள் அனைவரும் விடுமுறை நாட்களில் வேலை செய்வோம் என்றால் சரியல்ல.வாதி வீட்டு வேலைகளை பார்ப்பதால் எனது தாயார் தோட்ட வேலைகளை பார்த்தார் என்றால் சரியல்ல, எனது தாயாரும் வீட்டு வேலைகளை தான் பார்த்தார்.

4. திருமணத்திற்கு பின்னர் வாதி பெற்றோர்களை கவனித்து வந்தார் என்றால் சரியல்ல, திருமணமாகி அவரது ஊருக்கு சென்றுவிட்டார். வாதியின் திருமணத்திற்கு முன்பு நாங்கள் கூட்டுக்குடும்பமாக இருந்தோம் என்றால் சரிதான். எனது அண்ணன் பாண்டி திருமணம் முடித்து தனிக்குடித்தனம் சென்றுவிட்டார். தாவா 3ம் இலக்க சொத்து எனது தாயார் பெயரில் உள்ள சொத்து என்றால் சரிதான். எனது தாயார் உயிருடன் இருக்கும் வரை அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து எந்த ஆவணமும் எழுதி வைக்கவில்லை என்றால் சரிதான். தாவா 4ம் இலக்க சொத்தில் உள்ள வீடு பூர்வீக பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல, அரசால் இலவச பட்டா மூலம் எனது தகப்பனாருக்கு வழங்கப்பட்டதாகும். அரசால் இலவச பட்டா மூலம் வழங்கப்பட்ட தாவா 4ம் இலக்க சொத்து எங்கள் அனைவருக்கும் சம பாகம் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல, எனது

தகப்பனார் பெயருக்கு அரசால் வழங்கப்பட்டதாகும்.

5. என் தகப்பனார் பெயரில் தாவா 4ம் இலக்க சொத்திற்கு இலவச பட்டா வழங்கப்பட்டது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், இலவச பட்டா நகல் உள்ளது. மேற்படி இலவச பட்டா எனது தாத்தா பெயருக்கு அரசால் வழங்கப்பட்டது என்றும், அதை மறைத்து எனது தகப்பனாருக்கு வழங்கப்பட்டதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை பொறுத்து எனது பெற்றோர்கள் எந்தவிதமான விருப்புறுதி ஆவணமும் எழுதி வைக்கவில்லை என்றால் சரியல்ல, எனது தகப்பனார் தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார். எனது தாயார் பெயரில் உள்ள சொத்தையோ, பூர்வீக சொத்தையோ பொறுத்து எனது தகப்பனார் தானசெட்டில்மெண்ட் எழுதி வைப்பதற்கு சட்டப்படியான உரிமை இல்லை என்றால் சரியல்ல, எனது தகப்பனார் சுய சம்பாத்தியத்தில் எனது தாயார் பெயரில் சொத்து வாங்கப்பட்டது மேலும் எனது தாயாருக்கான மருத்துவ செலவுகளை எனது தகப்பனார் செய்தார்.

6. தாவா 1ம் இலக்க சொத்தில் கிடைத்த வருமானத்தின் மூலம் தாவா 2ம் இலக்க சொத்து வாங்கப்பட்டது என்றால் சரியல்ல, எனது தகப்பனார் வருமானத்தின் மூலம் சொத்து வாங்கப்பட்டது. தாவா 1ம் இலக்க சொத்தில் கிடைத்த வருமானத்தின் மூலம் தாவா 2ம் இலக்க சொத்து வாங்கப்பட்டது என்றும் வழக்கிற்காக அதனை மறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, எனது தகப்பனார் ராம்கோ சிமிண்ட் நிறுவனத்தில் 32 ஆண்டுகள் பணியாற்றி அதன் மூலம் கிடைத்த வருமானத்தில் சொத்துக்கள் வாங்கப்பட்டது. எனக்கு திருமணம் ஆகவில்லை. எனது உடன் பிறந்த சகோதரிகள் திருமணத்திற்கு முன்னர் 4ம் இலக்க சொத்தில்

குடியிருந்தார்கள் என்றால் சரிதான். எனது உடன் பிறந்த சகோதரிகள் திருமணத்திற்கு பின்னர் 4ம் இலக்க சொத்தில் குடியிருக்கவில்லை.

7. தாவா 4ம் அயிட்ட சொத்து பூர்வீக சொத்து என்பதால் அதை எனது தகப்பனார் எங்களுக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுக்க உரிமை இல்லை என்றால் சரியல்ல, 4ம் அயிட்ட சொத்து எனது தகப்பனாரின் சுய சம்பாத்திய சொத்தாகும். தாவா 3, 5ம் இலக்க சொத்துக்கள் எனது தாயார் பூச்சம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்பதால் அதனை எனது தகப்பனார் எங்களுக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுக்க உரிமை இல்லை என்றால் சரியல்ல, 5ம் இலக்க சொத்தை பொறுத்து தானசெட்டில்மெண்ட் எதுவும் எழுதவில்லை. பிராது சொத்துக்கள் அனைத்தும் கூட்டுக்குடும்ப சொத்து என்பதால் வாதிக்கு 1/5 பாகம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல, தாவா சொத்துக்கள் நாங்கள் சிறுவர்களாக இருக்கும் போது எனது தகப்பனார் சுயசம்பாத்தியத்தில் வாங்கிய சொத்துக்கள் ஆகும்.

8. வாதி மற்றும் பிரதிவாதிகள் தாவா சொத்துக்களில் கூட்டாக உழைத்ததால் அனைவருக்கும் சம பாகம் கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் வாதி மற்றும் எனது உடன் பிறந்த சகோதரிகள் பங்கு கேட்டு விடுவார்கள் என்று எனது தகப்பனாருக்கு சம்மதம் இல்லாமல் கட்டாயப்படுத்தி தானசெட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தினோம் என்றால் சரியல்ல, எனது தகப்பனார் விருப்பத்தின் பேரில் தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்தார். எனது தகப்பனார் இறக்கும் போது பலநாட்கள் உடல்நிலை பாதிக்கப்பட்டு இருந்தார் என்றால் 2 மாதமாக கல்லடைப்பால் பாதிக்கப்பட்டிருந்தார்.

9. எனது தகப்பனார் உடல்நிலை பாதிக்கப்பட்டு இருந்த போது வாதி உடன் இருந்து எனது தகப்பனாரை கவனித்து வந்தார் என்றால் சரியல்ல,

நானும், எனது அண்ணன் பாண்டியும் உடன் இருந்து கவனித்தோம். நான் கடந்த 20 ஆண்டுகளாக வெளியூரில் இருந்ததால் அது பற்றி விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, மருத்துவதுறையில் நான் பணி புரிவதால் எனது தகப்பனாருக்கு வேண்டிய சிகிச்சைகளை மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் சேர்த்து சுமார் 1 மாதம் கவனித்து வந்தேன். எனது தாயார் 2007 ம் வருடம், மே மாதம் இறந்தார். எனது தாயார் இறந்தவுடன் குடும்ப சொத்துக்களை பங்கு பிரித்து தர கேட்கவில்லை. எனது தாயார் இறந்தவுடன் குடும்ப சொத்துக்களை பங்கு பிரித்து தர பெண் பிள்ளைகள் கேட்டனர் என்றும், நாங்கள் காலம் கடத்தி வந்தோம் என்றால் சரியல்ல.

10. தாவா சொத்துக்களை பொறுத்து எனது தகப்பனார் உடல்நிலை சரியில்லாமல் இருந்த போது ஏற்படுத்தப்பட்டுள்ளதால் மேற்படி ஆவணம் சட்டப்படி செல்லக்கூடியதல்ல என்றும், மோசடியாக ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல, எனது தகப்பனார் 2016 ம் வருடம் தானசெட்டில்மெண்ட் எழுதும் போது சுய நினைவுடன் நல்ல நிலையில் இருந்தார். வாதி 19.11.2017 ம் தேதி எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பை நான் பெற்றுக்கொண்டேன், பதில் அறிவிப்பு அனுப்பினேன். நான் அனுப்பியதாக சொல்லும் பதில் அறிவிப்பை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது உடன் பிறந்த சகோதரியான வாதிக்கு தாவா சொத்துக்களில் எந்த பாகமும் கொடுக்கக்கூடாது என்பதற்காக வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு அனுப்பப்பட்ட அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல.

11. நான் கடந்த 20 ஆண்டுகளாக வெளியூரில் உள்ளதால் வழக்கு

பற்றிய விபரம் மற்றும் எங்கள் குடும்பம் பற்றிய விபரம் தெரிந்து கொள்ளாமல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் எங்களுக்கு பாத்தியப்பட்டது என எதிர்கோரிக்கையோ அல்லது தனியாக வழக்கோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதி கோரிய 1/5 பாகம் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்றும், பிராதுப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.